

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 8வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, 167வது வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன், மாமன்ற உறுப்பினர் திருமதி துர்கா தேவி நடராஜன் ஆகியோர் ஏற்பாட்டில், ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர் என். சந்திரன் எம்.சி. முன்னிலையில், கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ். பாரதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தி, தூய்மை பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் 500 நபர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கினார். இந்நிகழ்ச்சியில் எம்.எஸ்.கே. இப்ராகிம், வி.என்.பி.வெங்கட்ராமன், ஆர்.ஆர். ஜெயராம் மார்த்தாண்டன், அம்மன் பி. வைரமுத்து, ஆர்.பாபு, ஏ.சாலமோன் எம்.சி., ஈ.ரமேஷ், இ. உலகநாதன், கே.ஆர். ஜெகதீஸ்வரன், ஏ. வேலவன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8வது நினைவுநாளை யொட்டி குன்றத்தூர் வடக்கு ஒன்றியம், பெரியபணிச்சேரி ஊராட்சியில் உள்ள கலைஞர் படிப்பகத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செய்து கழகக் கொடியேற்றி பொதுமக்களுக்கு சக்கரை பொங்கல் வழங்கினார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## ஏழு ஆண்டுகளாக பயன்பாடின்றி கிடக்கும் செங்கல்பட்டு நவீன தடுப்பூசி ஆலை வளாகம்!

# ஆலையை இயக்க ஒன்றிய அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

## மக்களவையில் டி.ஆர்.பாலு, கேள்வி



புதுடெல்லி,ஆக.8-

செங்கல்பட்டு அருகே ரூ.900 கோடி செலவில் ஒன்றிய பொதுத்துறை நிறுவனமான ஹெ.எவ்.எல். பயோடெக் நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேக்சின் தடுப்பூசி மருந்து ஆலை இன்னும் செயல்படத் துவங்கவில்லை என்பது உண்மை தானா? அப்படியென்றால் அதற்கான காரணங்கள் என்ன? ஆலையை இயக்கவும் தடுப்பூசி உற்பத்தியை மேற்கொள்ள ஏதேனும் தனியார் மற்றும் அரசு நிறுவனங்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளதா? அப்படியானால் அந்த கோரிக்கைகள் மீது எடுக்கப்பட்ட முடிவு என்ன?

என செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் அருகே அமைந்துள்ள ஒன்றிய அரசுக்கு சொந்தமான நவீன தடுப்பூசி மருந்துகள் ஆலை கட்டிமுடிக்கப் பட்டு பல ஆண்டுகள் கழிந்தும் இயக்கத்துக்கு வராமல் பயனின்றிக் கிடக்கும் நிலை குறித்த கவலையைத் தெரிவிக்கும் முகத்தான் இந்த கேள்வியை இராவிட முன்னேற்ற கழகத்தின் பொருளாளரும் மக்களவை திமுக குழுத் தலைவருமான டி. ஆர்.பாலு அவர்கள் எழுப்பி இருந்தார்.

இந்நிலையில் ஒன்றிய மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலன் அமைச்சகத்தின் இணை அமைச்சரான திரு. பிரதாப் ராவ் ஜாதவ் அவர்கள் நேற்று(7.8.2026) மக்களவையில் எழுத்து பூர்வமான மிகமிக சுருக்கமான விவரங்கள் இல்லாத ஒரு பதிலை அளித்தார்.

அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் தனது பதிலில் தெரிவித்த தகவல்கள் வருமாறு:

ஒன்றிய அரசின் ஹெ.பி.எல். எனப்படும் ஹெ.எல்.எல், பயோடெக் லிமிடெட் HLL Biotech Ltd) நிறுவனம் செங்கல்பட்டு, தமிழ்நாடு அருகே ஒருங்கிணைந்த வேக்சின் (தடுப்பூசிகள்) வளாகம் ஒன்றை உருவாக்கிட அனுமதி அளித்திருந்தது. அந்த தடுப்பூசிகள் தயாரிப்பு வளாகத்தை இயக்கிட ஒன்றிய அரசு பல்வேறு முனைப்புக்கள் மூலம் முயற்சிகள் மேற்கொண்டது. 202022 கால கட்டத்தில் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அரசு தனியார் பங்கேற்பு முறையில்

ஆலையை இயக்கி உற்பத்தியை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்தல், செயலாக்க முன்மொழிவு ஆகியவற்றை அரசுக்கு சமர்ப்பிக்கும் படி வேண்டுதல் விடுக்கப்பட்டது. துவக்கத்தில் ஒருசில தனியார் நிறுவனங்கள் ஆர்வம் காண்பித்தன. ஆனால், இறுதியாக எவரிடமிருந்தும் முன்மொழிவுடன் கூடிய கோரிக்கைகள் வரவில்லை.”

அன்றைய முதல்வர் கோரிக்கையை ஏற்க மறுப்பு.

2021 ஆம் ஆண்டில் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்ற உடனேயே, கொரோனா தடுப்பூசியை தட்டுப்பாடு இல்லாமல் தமிழ்நாடு மக்களுக்குக் கிடைத்திடும் நோக்கில் இந்த ஆலையை செயல்பாட்டுக்கு கொண்டு வரவும் உடனடியாக தடுப்பூசி உற்பத்தியைத் தொடங்கி வேண்டும் என்ற வேண்டுகோள்தனை விடுத்தார்.

ஆட்சிப் பொறுப் பேற்ற ஒரு சில நாட்களில் செங்கல்பட்டு அருகே அமைந்துள்ள இந்த ஒருங்கிணைந்த வேக்சின் ஆலை வளாகத்தைப் பார்வையிட்டதுடன், ஆலையே இயக்கும் பொறுப்பை தமிழ்நாடு அரசுக்கு தர வேண்டும் என்ற வேண்டுகோளையும் ஒன்றிய அரசுக்கு வைத்தார். இது தொடர்பாக ஒன்றிய அரசுக்கு விரிவான முறையான கடிதம் ஒன்றையும் எழுதினார்.

அதனைத் தொடர்ந்து திமுக அரசும் அன்றைய முதல்வர் தளபதி அவர்களும் ஹெ.பி.எல். தடுப்புசி ஆலையை தமிழ்நாடு அரசு ஏற்று நடத்திட பல கட்ட முன்னெடுப்புகளையும் முயற்சிகளையும் மேற்கொண்ட பின்னரும் ஒன்றிய அரசு அதனை ஏற்கவில்லை. இந்நிலையில், சென்ற ஏழு ஆண்டுகளாக இந்த அதிநவீன ஒருங்கிணைந்த தடுப்பூசி ஆலை வளாகம் இயக்கப்படாமல் பயன்பாடின்றிக் கிடக்கிறது என்ற உண்மை அமைச்சரின் பதில் வழியாக தற்போது தெரிய வந்துள்ளது.

## களக்காடி எல்லப்பன் தலைமை! எம்,கிருஷ்ணமூர்த்தி முன்னிலை!

# ஜாபர்கான்பேட்டையில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் நிகழ்ச்சி!

## திருவுருவப்படத்திற்கு மாவட்டச் செயலாளர் மா,சுப்பிரமணியன் மலரஞ்சலி!

சென்னை, ஆக.8-

சைதை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் ஜாபர்கான் பேட்டை 139வது வட்டத்தில் கெங்கையம்மன் கோவில் அருகில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன், தலைமையில், பகுதி செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் 07.08.2026 அன்று காலை கலைஞர் திருவுருவ சிலைக்கு மாவட்ட செயலாளர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்தார்.

பாலவாக்கம் மு. மனோகரன், சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன், மின்னல் கந்தப்பன், எம்.எஸ். ஹரிபாபு, சைதை சாதிக், டி.என் சிறுமணி, த. சம்பத், வி.பி. ஜானகிராமன், சைமு. சேகர், அட்கோ கமலநாதன், ந.தமிழரசு, எஸ்.பி. கோதண்டம், எம். நாகா, ஆர். கிருஷ்ணகுமார், ந. மணிகண்டன், ஜி.கே.ராமச்சந்திரன், வி.மதிவாணன், த.மணி, மு.கதிரவன், பொ.பரத்குமார், பி.எல் முருகன், அ.அயத்பாஷா, இ. வரதன், மா. ஏழுமலை, பூபதி வெங்கடேசன், பி. எஸ். பிரகாஷ், சுமதி தீனதயாளன், சி.டி. காசிநாதன், து.முரளி, முகமது அலி, எம். அருண், மு.காளியப்பன், வி.பி. சிவகுமார், ம. திலிப்பன் மற்றும் ஏராள மானவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நன்றியுரை : பாபு எல்லப்பன்

நிதழ்ச்சி ஏற்பாடு : களக்காடி எல்லப்பன்



சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் மேற்கு பகுதி சார்பில் போராளி ஓய்வதில்லை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளையொட்டி மாபெரும் புகழரங்கம் போராளி 1 ”முத்தமிழ் என்றால் தன்மானம் மூச்சிலே நின்ற தமிழ் மானம் எனும் தலைப்பில் நேற்று சென்னை பாரிமுனை ராஜா அண்ணாமலை மன்றத்தில் 59 வது வட்டக் கழகச் செயலாளர் டி.சதிஷ்குமார் தலைமையில், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம். பி. இந்து.என்.ராம், ஆளூர் ஷாநவாஸ், முனைவர் பர்வீன் சுல்தானா ஆகியோர் புகழுரைத்தனர். இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.எஸ்.எம். நாதன், சி. மகேஷ் குமார், எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இப்புகழரங்கத்தில் வட்டக் கழகச் செயலாளர் வே.பா பிரபாகரன் நன்றி கூறினார்.

